# குண்டலகேசி நாடகம்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

# யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

## இயற்றியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| குறளின்பம் (4-ஆம் பதிப்பு) | 3 | 0 |
| ச்சவாயன் - ஹ்யூகோவின் ஃபிரெஞ்சு நாவல்— 2-ஆம் பதிப்பு) | 3 | 0 |
| ப தமிழ் இலக்கணம் | 3 | 4 |
| ான தீபம் | 2 | 4 |
| பாபதி அகவல் | 0 | 12 |
| _லகேசி அகவல் | 0 | 4 |
| _லகேசி நாடகம் | 0 | 12 |
| ணி (அரிய சமுதாய நாடகம்) | 1 | 4 |
| ணி மங்கம்மாள் (வீரச்சுவை நாடகம்) | 0 | 12 |
| கானந்தம் (சரித்திர நாடகம்) | 1 | 0 |
| தமிழ்ச் சோலை | 0 | 8 |
| காட்சி (2-ஆம் பதிப்பு) | 0 | 6 |
| பத் தாண்டவர் | 0 | 2 |
| _ச்சிந்து அண்ணுமலை ரெட்டியார் | 0 | 2½ |
| வ ப்ரம்மம் | 0 | 2 |
| மி இராமதீர்த்தர் | 0 | 2 |
| தை இன்பம் | 0 | 6 |
| ஜவானி (அரிய இனிய பிரெஞ்சுக் கதை) | 0 | 6 |
| க்தி அர்ச்சனை | 0 | 3 |
| மணி மோலியர் | 0 | 13 |
| தப் பெண்மணி-மேரி-கூரி | 1 | 0 |
| ன் வழிபாடு | 0 | 4 |
| ங்கர விஜயம் | 0 | 5 |
| மாலை (3-ஆம் பதிப்பு) | 1 | 0 |
| சை முழக்கம் (அச்சில்) | ...... | |
| சித்தி (தெலுங்கு மொழி பெயர்ப்பு அச்சில்) | ...... | |


அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் (போஸ்ட்)

திருச்சி ஜில்லா, S. INDIA

# குண்டலகேசி நாடகம்

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால [illegible] சபா.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
டி.க.சண்முகம் நூலகம்.

திருச்சி.
புத்தக வியாபாரசங்கம்

பதிப்புரிமை

முதற் பதிப்பு - 1944

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி. டி. சென்னை

# குண்டலகேசி நாடகம்

(A MUSICAL PLAYLET)

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

விலை அணா 12

# பதிப்புரை

குண்டலகேசி அகவலைத் தமிழர் போற்றி னர்; அதையே **முத்தமிழ் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்** நாடகமாக்கித் தந்தார். அந்நாடகத்தைத் திருச்சிராப்பள்ளி ரேடியோ நிலயத்தார், 22—12—1943-ல் மிகத் திறம்பட நடித்தனர்; அவர்கள் அன்று நடத்திய இந்த இசை நாடகத்தை மெச்சாத தமிழரில்லை.

இந்நாடகம் அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருளையும், வாழ்விற்கினிய பல நீதிகளையும் இனிய நாடகப் பாங்கில் விளக்கும். தமிழுலகம் ஊர்தோறும் இந்நாடகத்தை நடிக்க வேண்டுமென்றே, இதனை நூலாக வெளியிட்டோம். இதை நடிக்க விரும்புவோர் முன்னதாக எமக்கெழுதி எமது அனுமதி பெறவேண்டும்.

போதிநாதனின் அன்பு உலகில் தழைத்தோங்குக!

**இராமச்சந்திரபுரம்,**
**13—4—1944** } **அன்பு நிலயத்தார்.**

**எஎ—க—எ௫0**

# நாடகப் பாத்திரர்

| | | |
|---|---|---|
| 1. | குண்டலகேசி | தலைவி |
| 2. | வணிகமணி | தந்தை |
| 3. | பொன்னி | தாய் |
| 4. | காளன் | தலைவன் |
| 5. | ஆதிரை | தோழி |
| 6. | புத்த நந்தி | குலகுரு |
| 7. | வீரசேனன் | திருநகர் அரசன் |
| 8. | வித்தகன் | அமைச்சன் |
| 9. | நாகப்பன் | நயவஞ்சகன் (ஆதிரை உறவினன்) |

காவலர், தோழிமார், விறலியர் முதலியோர்.

# குண்டலகேசி நாடகம்

## முதற் காட்சி

[மந்திரி வித்தகன், மகன் காளன் போக்கை யெண்ணி, புத்தர் அவனுக்கு நல்ல புத்தி கொடுக்க இறைஞ்சுகிருன்.]

வித்தகன் :

விருத்தம்

[இராகம் பூரிகல்யாணி]

ஆருயிர் உலகுக் கெல்லாம்
அன்புடன் அருளு மேவிக்
காருயர் வானம் போலக்
கருணையே புரிந்த வள்ளால்,
பாருயர் இன்பமே தன்
பணிதரும் இன்ப மாருய்,
சீருயர் புத்த தேவா,
சேவடி பணிகின் றேனே !

போதிநாதா, அகளங்கா ! உன் அருட்குடைக் கீழ் எனது குலம் தழைக்கிறது ; எத்தனையோ பெரியார் அதில் விளங்கினர்கள். எனது குலப்பெயரைக் கெடுக்க இந்தக் காளன் வந்தானே ! இறைவா, அவனுக்கு நல்ல புத்தி வரச்செய் ! மூத்தமகன் என்று செல்லமாக வளர்த்தேன் ; அறநூல்களைப் பயிற்றினேன். இருந்துமென்ன ? பாயசக் கரண்டி இனிப் பறியுமா ? படித்தென்ன ? ஒழுக்கமில்லையே ! இன்று வரட்டும்... இதோ வருகிருன்.

[காளன் சீழ்க்கை யடித்துக்கொண்டும் பாடிக்கொண்டும் வருதல்.]

காளன் :

*இராகம் மாண்டு]* *[திஸ்ர ஏக தாளம்*

*இருக்கு மட்டும் இன்ப மாக வாழுவோம் ;*
*இனிய பாட்டும் இனிய கூத்தும் காணுவோம் !*

வித்தகன் : *காளா, என்ன பாட்டு? என்ன சீழ்க்கை? ஏன் இத்தனை நாழிகை?*

காளன் ; *அப்பா, இதெல்லாம் கேட்பா யென்று தானே பாட்டாகப் பதிற் சொல்லி வருகிறேன்...*

*இருக்குமட்டும்...காணுவோம்...!* [பாடுகிறான்.]

வித்தகன் : *சை, அதிகப்ரசங்கி! போதும் நிறுத்து பாட்டை...!*

காளன் : *முழுதும் பாடி நிறுத்துகிறேன் அப்பா...*

*இருக்குமட்டும், இருக்குமட்டும்...*
*நொறுக்க உண்டு பெருக்கச் செல்வந்*
*[தேடுவோம் !*
*நூறு நூறு கலைரசத்தை நுகருவோம்,*
*நுகருவோம், நுகருவோம்...!*

வித்தகன் : *காளா, போதும் பாட்டு! உன்னை இதற்கா பெற்று வளர்த்தேன், படிக்க வைத்தேன், ஆளாக்கினேன்? அந்தோ, என் குலப்பெயரைக் கெடுக்க வந்த துரோகியே, ஊர்க் காலிகளுடன் உனக்கென்னடா சிநேகம்? ஊதாரிகளுடன் சீழ்க்கையடித்துத் திரிவதேன்? நீ ஏதாவது தீயவழிகளில் அகப்பட்டு, என் மானத்தைக் கெடுக்கப் போகிறாய் ; தீயருடன் சேராதே !*

காளன் : *அப்பா, என் நேயரைத் தீயர் என்றால் எனக்குக் கெட்ட கோபம் வரும். நான் கலா*

ரசிகன்; நல்ல பாட்டுக் கேட்கவே அவர்களுடன் கூடுகிறேன்.

இராகம் புன்னாகவராளி] [ஆதி தாளம்

இளமைக்கேற்ற விருப்பம்—என்
இச்சைக் கேற்ற செய்கை;
வளமைக்கேற்ற போகம்—அப்பா
வளர்வ தென்ன குற்றம்?

வித்தகன்: என்னை எதிர்த்தா கேள்வி கேட்கிறாய்? நீ மனிதனா?

கூர்மையான மதியும், உயர்
கொள்கை யுள்ள சொல்லும்,
நேர்மையான நடையும்—கொண்ட
நீதியாளன் மனிதன்!

உனது நடை சுத்தக் கோணல்!

காளன்: எனது நடையா கோணல்? இதோ பாரப்பா, நான் காளன்; மயிலைக் காளைபோல நடக்கிறேன்! டட், டக் டக், பார்த்துக்கொள்!

வித்தகன்: தலையரட்டை பிடித்த பயலே; என் முன் நிற்காதே, போடா!

காளன்: அப்பா, அப்பா, தயவு செய்து நூறு வராகன் தா, ஓடியே போய் விடுகிறேன். இரண்டு நாள் உன்முன் தலை காட்டவே மாட்டேன்; தயவு செய்து நூறே வராகன்!

வித்தகன்: என் எரிச்சலைக் கிளப்பாதே! உனக்கு இனி ஒரு காசு'தரமாட்டேன். இனி என்னை அப்பா' என்னாதே

காளன்: பிறகு யாரை, 'அப்பா' என்பேன்?

**விந்தகன் :** இப்படித் தத்தாரிப் பிள்ளை எனக்குத் தேவையில்லை ; வெளியேறு ! காலிக்கூட்டத்துடன் எப்படியாவது நாசமாய்ப் போ ! என் மானத்தையும் சொத்தையும் அழிக்க வராதே !

**காளன் :** அப்பா, நீ மறுத்தாலும் நான் உன் பிள்ளை ; உன் சொத்து எனது. ஏராளமான பணம் இருக்கிறதே; எனக்கு நூறு வராகன் கொடுத்தால்...

**விந்தகன் :** போடா வெளியே; பதரே, அதமா, போ !

[டப்பென்று கதவை அடைத்து விடுதல்.]

**காளன் :** (வாயிலிலிருந்து) அப்பா, நன்றாகப் போகிறேன். நண்பர் என்னை ஆதரிப்பார்.

# இரண்டாங் காட்சி

[காளனைத் தீயநண்பர் பயன்படுத்திக்கொண்டு ஒரு வீட்டில் திருடுகிறார்கள்.]

1 போக்கிரி : *காளா, உன் அப்பன் பணந் தராவிட்டால் என்ன? ஹ, ஹ, ஹ, பார் வேடிக்கை! ...நம்மை நம்பப்பா! ஊரில் உள்ள பணமெல்லாம் நமது பணந்தானே? ஷ்வ கை! இந்த வீட்டில்...உன் அப்பனுக்கு நண்பன் ஆரியநாதன். நீ மட்டும் ஓசைப் படாமல் உள்ளே சென்று கொல்லைக் கதவைத் திறந்து வைத்துவிடு போதும். மற்றதெல்லாம் எங்கள் வேலை.*

காளன் : *கொல்லைக் கதவு திறந்தே வைத்திருக் கிறேன். ஆனால், அண்ணா, எனக்குப் பயமாயிருக் கிறது.*

1 போக்கிரி : *பயமா? எதற்கு? யாருக்கு? சாமிக்குக்கூடப் பயமில்லை. கழுத்துக்கு மிஞ்சிய சிட்சையில்லையே? நண்பா, நம்மை நம்பு; தைரியமா யிரு! இதோ, அரைமணி நேரத்தில் பை பையாகக் கொண்டு வருகிறேன். நாளை இன்பச் சிகரத்தில் ஏறி நடனமாடுவோம். நமது பொன்னிக்குக் கை நிரம்பக் கொடுத்துவிட்டால், நாளெல்லாம் ஆடல் பாடல் அமளியாக அனுபவிக்கலாம்.*

காளன் : *நான் வெளியேதான் இருப்பேன்.*

2 போக்கிரி : *அட தொடை நடுங்கி! நமது உப தேசம் பெற்றும் இன்னும் பயமா?*

2 போக்கிரி : போதுமண்ணே, காரியத்தைப் பார்; வா !

[இருவரும் உள்ளே சென்று திருடுதல்.]

காளன் : தந்தை சொல்வது மெய்தான். இவர்கள் உறவு தீதே. நாளை இவர்களை விலக்கிவிடுவோம்.

(திரைக்குப் பின் :) ஐயோ கள்ளர், திருடர்! பிடி பிடி டடடேய், விடாதே! ஹா, அதோ, இதோ! அடி, பற்று, கட்டு! ஐயோ போய்விட்டான்! இதோ இவனே கள்ளன்; கூட்டுக் களவாணி; பிடி, அடி, போடு விலங்கு !

[இச்சமயம் உள்ளே பெருஞ்சத்தம்; திருடர் சொத்தை எடுத்தோடல். காவலர் காளனைப் பிடித்து விலங்கிட்டுச் செல்லல்.]

காளன் : ஐயா, நான் திருடனல்லேன். எனக்கொன்றும் தெரியாது.

காவலர் : தெரியாதா? எல்லாம் அரசர் முன்; கள்ளா, அகப்பட்டாய்; உன் கூட்டுக் களவாணிகளின் உளவைச் சொல்லாவிட்டால் கழுத்தைச் சீவிவிடுவோம்.

காவலர் : அடே விடாதே் கட்டு, தூக்கு! ஒரே தூக் !

காளன் : ஆ! எனக்கோ இப்பழி வந்தது? தந்தையே, உம்சொற் பலித்தது.

காவலர் : பேசாதேடா, கைதி, வா !

[இழுத்துச் செல்கின்றனர்.]

## மூன்றாங் காட்சி

[அரசவை; அமைச்சர் முதலியோர் அரசவாழ்த்துப் பாடுகின்றனர்.]

எல்லாரும்:

இராகம் காப்பி] [ரூபக தாளம்

பல்லவி

பாரெல்லாம் போற்று கின்ற
பரமனைப் பணிகுவோம் (பா)

அநுபல்லவி ...

சீ...ரோங்கி...எங்கள் வேந்தன்
செயம் பெருகிடப் பயம் விலகிட (பா)

சரணம்

அறமும், அறிவும், அன்பும், இன்பும்
அருளும், பொருளும் ஓங்கவே...
திறமையான தெய்வ நீதி......
திகழ மகிழ அகிலம் புகழப் (பா)

வீரசேன மகாராஜன் வெல்க!

[காளனைக் காவலர் கொண்டு வந்து நிறுத்துகின்றனர்.]

அரசன்: அமைச்சர்காள், இறைவன் அருளாலும், உங்கள் துணையாலும் நமது செங்கோல் வெற்றி மேல் வெற்றியே பெற்றது. நேற்று வரையில், நமது குடைக்கீழ் கொலை களவு கள் விபசாரம் இவை இல்லை. இன்றோ...ஹா...என்ன கொடிய திருட்டு! வித்தகரே, உம் மகனோ இப்படிச் செய்தான்?

**வித்தகன் :** அரசே, அவன் எனது சொற் கேளாது தடித்தான்; தீயருடன் சேர்ந்து குடித் தான்; நேற்று என் நண்பர் வீட்டிற் கொள்ளை யடித்தான். இனி அவன் என் மகனல்லன்; தங்கள் கைதி.

**அரசன் :** காளா, உன் மதி ஏன் இப்படிப் போனது? உன்னுடன் திருடியோர் எங்கே? பொருள் எங்கே? சொல் நேர்மையாக!

**காளன் :** அரசே, விதி மதியைக் கெடுத்தது பயனை அனுபவிக்கிறேன். என்னைக் கெடுத்த திருடர் பொருளைக் கொண்டோடினர். எனக்கு வேறொன் றுந் தெரியாது.

**அரசன் :** தெரியாதா? ஹூம்...உன் திருட்டுக் குச் சிறை! கள்வரும் பொருளும் வந்து சேரவேண் டும்! மந்திரி, இன்னும் ஐந்தே நாள்; பொருள் உரிய வரிடம் சேரவேண்டும். இக்கள்வன் உள்ளதைச் சொல்லாவிட்டால், தலை தப்பாது. காவலர்காள், இவனைக் கொண்டுபோய்ச் சிறையிடுங்கள்!

**காவலர் :** ஆணை...ஒரே தூக்...வா கள்ளா!

[விலங்கிட்டு இழுத்துச் செல்லல்].

**காளன் :** ஹா புத்த தேவா, உனது "**தம்மபாதம்**" படித்தும் மதிகெட்டேனே!

**அரசன் :** அமைச்சர்காள், நம் நண்பர், வணிக மணி உலகறிந்தவர்; அவர் துணையைக்கொண்டு துப் பறிக! காளன் மனந்திருந்தி, பொருளும் கிடைத் தால், விடுதலை.

**அமைச்சர் :** அரசே, எங்களால் ஆனதை உடனே செய்கிறோம். நீதி முறைப்படி நடக்கட்டும்!

**அரசன் :** இனி, நாளைக் கூடுவோம்; சபை கலைக!

## நான்காங் காட்சி

[குண்டலகேசி கன்னிமாடத்தில் தோழியருடன் பாடிக்கொண்டே பந்தாடல்.]

**எல்லாரும் :**

*இராகம் குந்தலவராளி ]* *[ திஸ்ர ஏக தாளம்*

வந்து வந்து செல்லு கின்ற
வாழ்க்கை மின்னல் என்னவே,
உந்தி உந்தி, முந்தி முந்தி,
ஓங்கிப்பந் தடிப்பமே!

ஆதிரை : அடி குண்டலகேசி, அன்னத்தைப் பாரடி! உன் பின்னே நடைகற்று வருகிறது!

தோழி : அடி குண்டலகேசி, உன் கூந்தலைக் கண்டு இந்த மயில் தோகைவிரித் தாடுகிறதே!

குண்டலகேசி : தோழிகாள், என் மனமயில் அப்படி ஆடவில்லையே!

ஆதிரை : ஆடும் ஆடும், கொஞ்சம் பொறு!

குண்டலகேசி : எதற்கெடுத்தாலும் உனக்குக் கேலிதானம்மா ; ஆட்டத்தைக் கவனி!

பொன்னணி குலுங்கவே
பொலங் கொடியைப் போலவே,
மின்னிடை துவள வேக
மாகப்பந் தடிப்பமே!

ஆதிரை : இந்தப் பாட்டில் உன்னையே படம் பிடித்துவிட்டாயே, குண்டலகேசி!

**தோழிமார் :**

*வெற்றி வெற்றி யென்று நாம்*
*விரும்பி யன்புமேவியே,*
*எற்றி எற்றி இங்கு மங்கும்*
*ஏகிப்பந் தடிப்பமே !*

**ஆதிரை :** *வென்றாள் குண்டலகேசி; ஆட்டம் முடிந்தது.* [எல்லாரும் கைதட்டல்]

*குண்டலகேசி, அதோ நிறைமதி மரக்கிளையில் மறைந்து உன் முகத்தைப் பார்க்கிறது; தனக்குப் போட்டி வந்ததென்று திகைக்கிறது போலும் !*

**குண்டலகேசி :** *தோழீ, முல்லைத்தென்றல் வீசி, அந்தி வந்தது; அந்தி மகிழச் சந்திரன் வந்தான்!*

**ஆதிரை :** *உனக்கும் ஒரு சந்திரன் வருவான்; பயப்படாதே !*

[இச்சமயம் காவலர், காளனைத் தெருவோடு இழுத்து வருகின்றனர்; காளன் கன்னிமாடத்தையே பார்க்கிறான்.]

**காவலர் :** *கள்ளா, காளா, கண் எங்கே பார்க்கிறது? ஹ, கன்னி மாடத்தில் யாரைப் பார்க்கிறாய்? ஹூம்!*

**காளன் :** *காவலர்காள், மரியாதை! நான் மந்திரி மகன்.*

**காவலர் :** *நீ ராசாமகனானால்தான் என்ன? நீ எங்கள் கைதி; நேரே நட !* [செல்லல்]

**குண்டலகேசி :** (மனதுள்) *ஆ! யாரந்த அழகன்...? அவனையேன் காவலர் கொண்டு செல்கிறார்கள்? ஆ, அவன் என் உள்ளங்கவர் கள்ளனே !*

ஆதிரை: குண்டலகேசி, தெருவில் என்ன பார்க்கிறாய்? சந்திரன் இல்லையே. அதோ காவலர் கொண்டு செல்வது கள்வன்.

குண்டலகேசி: போம்மா, சும்மா!

ஆதிரை: எங்கே என்னைத் தூது போகச் சொல்லுகிறாய்?

குண்டலகேசி: தோழீ ஆதிரை, அந்தக் காவலருடன் செல்லும் அழகன் யார்? அறிந்து வாராயோ?

ஆதிரை: நன்றாக அறிந்து வருகிறேன். ஆனால், அவனைப்பற்றி உனக்கென்ன விசாரம்?

குண்டலகேசி: கேள்வி கேட்காதே; குறும்பு செய்யாதே; சொன்னதைச்செய்!

[தாய் பொன்னி வருகிறாள்].

பொன்னி: அம்மா குண்டலகேசி, புத்த நமஸ்காரஞ் செய்ய வா! விளக்கேற்றியாயிற்று.

குண்டலகேசி: இதோ வருகிறேனம்மா. தோழிகாள், செல்வோம்!

# ஐந்தாங் காட்சி

[பூசையறையில் பொன்னியும் குண்டலகேசியும்.]

**பொன்னி :** குண்டலகேசி, புத்தபகவான் உனக்கு நல்ல கணவனைத் தரட்டும். புத்தநமஸ்காரம் சொல்லி மலர்தூவி வணங்கம்மா! [பாடுகிருள்]

**குண்டலகேசி :**

*[" நாதவிந்துகலாதி " என்ற மெட்டு]*

*பூரணனந்த ஜோதீ—நமோ நம*
*புத்த சத்குரு நாதா நமோ நம*
*பாரெ லாம்புகழ் பாதா நமோநம—முனிராஜா!*
*தீர ஞானப்ர காசா—நமோ நம*
*ஜீவ காருண்ய நேசா—நமோ நம*
*மார னஞ்சிடுந் தேஜா நமோ நம—பகவானே!*

புத்ததேவா, இறைவா, என் மனங்கொண்ட அந்த அழகனையே எனக்குத் தந்தருள்!

[மணியடித்தல்]

**எல்லாரும் :**

*ஓம் நமோ தஸ்ஸ, பகவதோ அரஹதோ*
*ஸம்மா ஸம் புத்தஸ்ஸ,*
*புத்தா சரணம்! அறமே சரணம்! அறவீர்*
*[சரணம்!* [செல்லல்]

# ஆறாங் காட்சி

[வணிகமணியும் பொன்னியும் மகள் நிலையைப் பற்றிப் பேசுதல்]

வணிக : பொன்னி, குண்டலகேசிக்குச் சில நல்ல வரன்களைப் பார்த்தேன்; உன்னிடமும் சொன்னேன்.

பொன்னி : நான் அவளிடமும் எல்லாம் சொன்னேன்; அவள் ஒரே பிடிவாதமாகத் திருமணமே வேண்டாமென்றாள்; பிறகு பித்துப்பிடித்ததுபோல் தனியே உம்மென்று உட்கார்ந்தாள்; பிறகு எதோ பிதற்றினாள். இப்போது ஊணுறக்கமில்லை; ஆடல் பாடல் இல்லை; யாழ் புளித்ததாம்; பால் கசந்ததாம்; பிதற்றுகிறாள்! ஆதிரை மூலம் காரணமெல்லாம் அறிந்தேன். இந்த மாதமே கலியாணம் செய்ய வேண்டும்.

வணிக : எல்லாம் வயதின் வக்கிரமே! பொன்னி, நான் பார்த்த மாப்பிள்ளைகள் தங்கமானவர்கள். மதுரைக் கணபதிக்கென்ன?

பொன்னி : கணபதிக்கு யானை உடம்பாம்; யானைத் தொந்தியாம்; எறும்புக்கண்ணாம்! 'அவன் வேண்டா' என்கிறாள் குண்டலகேசி.

வணிக : கும்பகோணம் நாகப்பனுக்கென்ன?... செல்வச்சீமான்; இவள்மேல் உயிராயிருக்கிறான்.

பொன்னி : கும்பகோணம் நாகன் வம்புக்கார

னும்; கம்பி நீட்டுவானும்; ஆடல்பாடல்தான் மிச்சமாம்!

வணிக: அட்டைசுவரியம் அழகப்பன்?

பொன்னி: அட்டைசுவரியம் அழகப்பனுக்கு, முட்டை மூளையாம்; கெட்ட சகவாசமாம்; துட்ட நடத்தையாம்.

வணிக: இரத்தினம் பிள்ளை சொக்கு மன்மதன் போலிருக்கிறானே!

பொன்னி: சொக்கு மன்மதக் குரங்காம்; சேட்டைதான் மிச்சமாம்.

வணிக: இப்படி எல்லாரையும் தட்டிக் கழித்தால் என்ன செய்வது? அவள் நோக்கந்தான் என்ன?

பொன்னி: அவள் நோக்கத்தை ஆதிரையும் சொன்னாள்; நேற்று அவளும் சொல்லிவிட்டாள்; கனவிலும் "காளன், காளன்" என்று புலம்பினாள்...

வணிக: காளனா? வித்தகன் பிள்ளையா? அந்தக் கள்வனா? திருடனுக்கா என் மகளைத் தருவேன்? அரசர் அவனைச் சிறையிலே வைத்திருக்கிறார். அவனுடன் சேர்ந்த கூட்டுக்களவாணிகளைக் கண்டு பிடிக்கவேண்டும்; திருட்டுச் சொத்தை மீட்க வேண்டும். அரசர் ஆணைப்படி நானும் மந்திரியும் முயன்றுகொண்டிருக்கிறோம். அவன் திருந்தி, விடுதலையாகி, அவமானம் நீங்கிய பிறகன்றோ ஆள்? இவள் புத்தி இப்படி மண்ணானதே!

பொன்னி: நானும் சொல்லிப் பார்த்தேன்; மனங்கொண்ட மணாளனுக்கே வாழ்க்கைப்படுவா

ளாம். காளனைத்தான் அவளுக்குப் பிடித்திருக்கிறதாம். அவன் நிரம்பக் கற்றவனும்; மாசற்றவனும்; தேசுற்றவனும். யாரோ பொல்லாதவர்கள் அவனைக் கெடுத்துவிட்டார்களாம். காளன் நல்லவனுய்விட்டானும். புத்ததேவர் கனவில் வந்து சொன்னாராம். பிதற்றுகிருள்!

வணிக; அரசன் மகிழ்ந்தால், காளன் திருந்தியிருந்தால், என் நண்பன் வித்தகன் சம்மதித்தால், இந்தக்காரியத்தை நடத்துவோம்.

பொன்னி: காரியம் விரைவாக நடக்கட்டும். நல்லசெய்தி கேட்டதும் அவளிடம் சொல்லுகிறேன். பெண்ணின் பிடிவாதம் கொண்டதை விடாது.

வணிக: இதோ செல்கிறேன்; செய்தியனுப்புகிறேன்.

# ஏழாங் காட்சி

[காளன் சிறையில் புலம்பல்.]

காளன்: தீயரைத் தொட்டேன்; கெட்டேன்; அல்லல் பட்டேன்; கலையின் மோகத்தால் கொலை காரர் வலையிற் சிக்கினேன்; உட்கினேன். நானங்கே நின்றதும் பிசகே; பனையடியிற் பாலுண்டாலும் கள்ளென்னும் உலகம்! இறைவா, என்னை விடுவி! இச்சிறையில் உடலே உள்ளது. மனமோ ஓர் அழகிற் சிறையுண்டு துடிக்கிறது. தெருவிற் செல்லும்போது, கன்னி மாடத்திலிருந்து என்னையே பார்த்த நங்கை யாவளோ? அவளிடம் ஏன் என் உள்ளம் சிக்கியது?

இராகம் மோகனம்] [ஆதி தாளம்

மேகத்திலே வளர் மின்னல் போல்—அந்த
மெல்லிய பூங்கொடி என்மன
மோகத்திலே வளர் கின்றனள்—அவள்
முகமலரை யினிக் காண்பனே!

எனக்கும் விடுதலையாகி, விருப்பமும் நிறைவேறுமா?

[வருதல் மந்திரி, வணிகமணி, காவலர்.]

மந்திரி: காளா, பிழைத்தாய்; கள்ளர் பிடிபட்டனர். பொருள் கிடைத்தது; நீதி நிலைத்தது. உன்னை அரசர் விடுவிக்கிறார்.

காளன்: தந்தையே நன்றி. தங்கள் சொல் மந்திரம். புத்தி வந்தது. கற்றேன் பாடம். இனி, நேர்மையாகவே நடப்பேன்; திருந்தினேன். அப்பா, நன்றி, நன்றி!

**மந்திரி :** காளா, இதோ நிற்கும் பெரியாருக்கே நன்றி செலுத்து; இவராலேதான் இன்று நீ விடுபட்டாய். இவரே கள்ளரைக் கண்டுபிடித்துப் பொருளையும் கணக்காகக் கண்டுபிடித்தவர். இவரை வணங்கி நட !

**காளன் :** பெரியீர் நன்றி, வணக்கம். தங்கள் விருப்பமெப்படியோ அப்படியே நடக்கிறேன்.

**வணிகமணி :** காளா, என் விருப்பத்தை உடனே அறிவாய். நேராக எனது மனைக்கே வா !

**மந்திரி :** காவலர்காள், இவரைச் சிறை நீக்கி, மரியாதையுடன் வண்டியேற்றி யனுப்புங்கள் !

**காவலர் :** உத்தரவு எசமான். [சிறை நீக்கல்]

**காளன் :** [வெளிவந்து] விடுதலை, விடுதலை, விடுதலை!

[செல்லல்]

## எட்டாங் காட்சி

[குண்டலகேசியின் விரகதாபம்; ஆதிரை சமாதானப் படுத்தல்.]

ஆதிரை : குண்டலகேசி, என்னருமைத் தோழி, ஏனிந்த மயக்கம், தியக்கம், தளர்ச்சி ? ஐயோ, உன் பூமேனி ஏனிப்படி வாடித் துவள்கிறதடீ...?

குண்டலகேசி : ஆதிரை, காரணம் தெரியாதா ? தாயிடம் சொன்னுயா? தந்தை என்ன சொல்லு கிருர் ?

ஆதிரை : அம்மா குண்டலகேசி, அமைதியாயிரு ! தந்தை உனக்கு நல்ல இடம் பார்த்திருக்கிருர்.

குண்டலகேசி : எந்த இடமடீ? ஆதிரை, விபர மாகச் சொல்லு !

ஆதிரை : குண்டலகேசி, கும்பகோணம் நாகப்பன் பெரிய செல்வன் ; கலாநிபுணன் ; பெற்ருேரில்லை ; ஏராளமான செல்வாக்குண்டு ; வாணிபத்தால் பொன்மலை குவிக்கிருன். அவன் வீட்டிற்கு நீ தான் அரசி. அவன், உன்மேல் உயிர்வைத்திருக் கிருன்.

குண்டலகேசி : ஆதிரை, 'இந்தமாதிரி என்முன் பேசாதே !' என்று எத்தனை தடவை சொல்வது? அந்த நாகப்பாம்பை நான் அறிவேன் ; அழகான விஷத்தை நான் கொள்ளேன். அவன் வாழ்க்கை ஆடல் பாடலுடன் சரி. கலையின் பெயரால் தனது ஒழுக்கத்தைக் கொலைசெய்துகொள்ளும் அவனைப்

பற்றி இனிப் பேசாதே! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வனைப்பற்றி அன்னையிடம் சொன்னாயா?

ஆதிரை: சொன்னேனம்மா...உன் தாயார் உன் தந்தையிடம் எல்லாம் சொன்னாள். காளன் விடுதலையாவானாம்!

குண்டலகேசி: தோழீ, ஆ, அந்த விடுதலைக்கு முன், இந்தக் கூண்டுக்கிளி விடுதலையாய்விடும்போலிருக்குதடீ!

இராகம் உசேனி] [திஸ்ர ஏக தாளம்

ஆவி துடிக்குதடீ—சகியே
ஆசை துடிக்குதடீ—இந்தப்
பாவி மனம்பறித்த—கள்ளன்
பரிந்து வாரானே!

தோழீ, ஆதிரை! உலகமே பிடிக்கவில்லையடீ...நான் முன்னே விரும்பிய பாட்டும் இயற்கையும் நஞ்சாயின......சகியே,

பஞ்சவர்ணக் கிளியும்—என்னை
பகடி செய்யுதடீ—சகியே
கொஞ்சுங் குயிலிசையும்—என்
குட்டை யுடைக்குதடீ!

ஆதிரை: குண்டலகேசி, உனக்கு வசந்தகாலம் பிறந்தது; கவலைப்படாதே......அதோ, திங்கள் எவ்வளவு அமைதியாக மேகத் திரைகளைப் பிளந்து கொண்டு நகைக்கிறது! கவலை மேகத்தை உனது புன்னகையால் உதறியெறி!

குண்டலகேசி: தோழி, காவியங்களில் சந்திரா லோபனத்தைப் படித்தபோது. நான் தமயந்தியை யும் சீதையையும் கேலி செய்தேன். இப்போதே கவியுள்ளம் தெரிகிறது!

திங்களின் வெண்ணிலவும்—கொடுந்
தீயினை வீசுதடி—சகியே
பொங்கும் புதுத் தென்றல் என்னுடன்
போர் தொடுக்குதடி!

ஆதிரை: தோழி, இந்த மனப்போரை வெல்வாய்; அதற்கு வீரனொருவன் வருவான்; அமைதியாயிரு!

குண்டலகேசி; அமைதியெங்கே? என் அமைதி அங்கே சிறையில் வாடுதடீ......ஆதிரை, தாயிடம் சொன்னயா?

ஆதிரை: எல்லாம் சொன்னேனம்மா!

குண்டலகேசி: காளன், இன்றேல் காலன்...! இரண்டிலொன்று தீர்மானம்...ஆதிரை, உடனே சென்று தந்தையிடமிருந்து செய்தி கேட்டுவா!

ஆதிரை: வருகிறேன்; தோழி, அமைதியாயிரு! [செல்லல்.]

குண்டலகேசி: மாரனை வென்ற வீரனே, புத்த பகவானே, இந்த நோயைத் தீர்! இன்றேல், என் ஆசையை விழுங்கிவிடு, பாசத்தை அறுத்தெறி!

வேதனை தீராதோ?—என்மன
வேட்கை தணியாதோ?
போதி யடி யமர்ந்தாய்—சரணம்
புத்த பகவானே!

[வருதல் ஆதிரை, பொன்னி]

ஆதிரை: தீர்ந்தது வேதனை! தோழீ, ஜயம், சுபம். உன் மனோரதம் கைகூடியது...தாயார் நல்ல செய்தி கொண்டுவந்தாள், கேள்!

பொன்னி: மகளே, காளன் விடுதலை யடைந்தான்; அவனும் உன்னையே நேசிக்கிறான். தந்தையும் சம்மதித்தார். மந்திரிக்கும் மகிழ்ச்சி. நாளையே திருமணம். என் கிளியே, புத்த பெருமான் உன் விருப்பத்தை நிறைவேற்றினார். நிம்மதியாயிரு!

குண்டலகேசி: வந்தனம் அம்மா; புத்தனை நினைத்தேன், நற்செய்தி வந்தது. வந்தனம்.

## ஒன்பதாங் காட்சி

[நாகப்பனும், ஆதிரையும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

நாகப்பன்: ஆதிரை, உன் தோழியிடம் என் ஆசையைச் சொன்னாயா?

ஆதிரை: எல்லாம் சொன்னேன்!

நாகப்பன்: என் அழகு, எனது செல்வம், என் கலைச்சுவை, எனது வாழ்வின் சுதந்தரம், எனது செல்வ மாளிகை, எல்லாம் குறித்துச் சொன்னாயா?

ஆதிரை: சொன்னேன், சொன்னேன்......

நாகப்பன்; எனக்கு வாழ்க்கைப் பட்டால் இந்திரபோகம் அனுபவிக்கலாம் என்றாயா?

ஆதிரை: ஆம், ஆம்!

நாகப்பன்: நான் ஒரேபிள்ளை. பெற்றோரும் காலஞ் சென்றனர். எனக்கு வாழ்க்கைப்பட்டால், அவளே என் வீட்டின் தனியரசியா யிருப்பாள். மாமியார் மாமனார் அதிகாரமில்லை; நாத்தனார் இல்லை சுதந்தரமாயிருக்கலாம் என்றாயா?

ஆதிரை: ஆம், ஆம், ஆம்!

நாகப்பன்: தலைமுதல் கால் வரையில் தங்கமாயிழைப்பேன்; அன்னத்தூவி மஞ்சத்தில் வைத்துச் சீராட்டுவேன் என்றாயா?

ஆதிரை: அவளை நீ தலையில் வைத்துத் தாங்குவாய்; குதிரைகூடச் சுமப்பாய் என்று சொன்னேன்!

நாகப்பன்: நாளொரு நகையும், பொழுதொரு புடவையுமாக அவளுக்கு அலங்கரிப்பேன் என்றாயா?

ஆதிரை: அலங்காரத்திற்கே ஆயிரம் சேடி வைப்பாய் என்றேன்!

நாகப்பன்: குண்டலகேசி என்ன சொன்னாள்? என்னைக் காதலிக்கிறாளா?

ஆதிரை: அவள் முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டு, தோளில் கன்னத்தை ஓர் இடி இடித்துச் சும்மாதான் இருந்தாள்.

நாகப்பன்: ஆ, அதுதான் காதலுக்கு அடையாளம்: உள்ளம் நிறைந்த காதலுக்கு உரையேது! ஆதிரை, இன்னொருதரம் கேள்; அவள் ஜாடையாகத் தலையசைத்தாலும் போதும்!

ஆதிரை: நாகப்பா, பேச்சை வளர்க்காதே! அவளுக்கு உன்மேல் பிரியமில்லை. அவள் மனமெல்லாம் காளனிடம் உள்ளது. வேறெவர் பேச்சையும் அவள் விரும்பவில்லை.

நாகப்பன்; ஐயையோ, ஐயையோ! எனது காதலெல்லாம் பகற்கனவானதே! சரி ஆதிரை, மறுதரம் எனக்காக மன்றாடு! குண்டலகேசி தலையசைத்தாலே போதும், இலட்சம் வராகன் கொண்டு ஓடி வருகிறேன்.

ஆதிரை: நாகப்பா, குண்டலகேசியை நீ மறந்து விடு! உனக்கென்ன பெண்ணுக்குக் குறைவா? போ! தோழி காத்திருப்பாள்; நான் போகிறேன்...

[செல்லல்.]

நாகப்பன்: மறப்பதா? இந்த அழகான பூங்கொடியை மறப்பதா? இவளைக் காளன் மணப்பதா?

மணக்கட்டும், மணக்கட்டும். இவர்கள் கூடி வாழாமல் செய்து விடுகிறேன். தந்திரம் எனக்குத் தெரியும். காளன், கலைமயக்கங்கொண்ட இசைப்பித்தன்; சரியான விறலியர் பாட்டில் ஈடுபடுத்தி வேலை செய்கிறேன். குண்டலகேசி, நீ என்னுடன் வாழ்வாய்; அவனுடன் வாழமாட்டாய்.........இப்போதே என் சூழ்ச்சிகளைத் தொடங்குகிறேன். காளா, தோழா, எனக்குப் போட்டியாகவா புகுந்தாய்? வா வா!

[செல்லல்.]

# பத்தாங் காட்சி

[காளன் - குண்டலகேசி திருமணம்; மணவினை
முடிந்தபிறகு எல்லாரும் வாழ்த்துதல்,]

எல்லாரும்: குண்டலகேசியும் காளனும் இல்லற வாழ்வில் இன்பமோங்குக! புதுமணாளர் வாழ்க்கை பொலிக, பொலிக!

இராகம் சுருட்டி] [ஜம்பை தாளம்

பல்லவி

மங்களம் மங்களம்—சுப
மங்களம் மங்களம்... (மங்களம்)

அநுபல்லவி

நங்குலம் ஓங்கிட
நாடு செழித்திட (மங்களம்)

சரணம்

பொங்குக எங்குமே
பொன்னும் பசுமையும்
புதுமணக் காதல்வை
போகம் பொலியவே! (மங்களம்)

புதுமணாளர் நீடுவாழ்க!

# பதினோராங் காட்சி

[குண்டலகேசியும் காளனும் நிலாமுற்றத்தில் அமர்ந்திருக்கின்றனர்.]

காளன்: கண்ணே, குண்டலகேசி, முன்னே இருளாயிருந்த உலகம் இப்போது ஒளிமயமாயிருக்கிறது; எங்கும் உன் மதிமுகப் புன்னகையே காண்கிறேன்; இயற்கை யழகைப் பார்; அதோ, திங்கள் புரியும் மாயச்சிரிப்பைப் பார்!

குண்டலகேசி: நாதா, திங்களின் சிரிப்பு, முன்னே எரிப்பா யிருந்தது; இப்போது இனிப்பாயிருக்கிறது! அதன் வெண்ணிலாவை வரவேற்கிறேன்.

இராகம் நீலாம்பரி] [திரிபுடை தாளம்

அல்லிக் குளத்தருகே வெண்ணிலாவே—நீ
அன்னம்போல் ஆடுகின்றாய்—வெண்ணிலாவே!

காளன்:

மெல்லியதென்றலுடன் வெண்ணிலாவே—எங்கள்
மேனியைக் கொஞ்சுகின்றாய் வெண்ணிலாவே!

குண்டலகேசி: நாதா, உள்ளமும் உள்ளமும் பொருந்தியவுடன் உலகே இன்பமயமானது. அன்பும், அழகும், ஆர்வமும், கலையும் சேர்ந்த இல்லறமே நல்லறம்.

காளன்: கண்ணே, இல்லறமே அறம்பொருளின்பக் கலைதான். அதிலும் உன்னைப்போன்ற கற்பிளஞ் செல்வியுடன் கூடிய இல்லற வாழ்க்கை பேரின்பமளிக்கிறது; உன் முத்தின்பத்தின்முன் முத்தியின்பமும் கைத்தது!

இராகம் மோகனம்] [ஜம்பை தாளம்

முத்தியின் இன்பமும் கைத்ததே—உன்
மோகன முத்து முறுவல்முன்
பத்தரை மாற்றுப் பசும்பொன்னே—உன்னைப்
பார்க்கப் பார்க்கப்பர மானந்தம்!

குண்டலகேசி

அன்றிலுங் கிள்ளையும் போலவே—கண்ணே
ஆவியும் யாக்கையும் போலவே,
ஒன்றியுள் ளன்பினில் ஓங்குவோம்—குறள்
ஓதிடும் இல்லறந் தாங்குவோம்!

காளன்: கண்ணே, நானே நீ, நீயே நான். உடலே இரண்டு, உயிரும் உள்ளமும் ஒன்று.

குண்டலகேசி: கண்ணாளா, இப்படியே நாம் இன்புற்றிருக்க புத்த பெருமான் அருள் புரியட்டும். இனித் துயில்கொள்வோம்!

# பன்னிரண்டாங் காட்சி

[நாகப்பன் மாளிகையில் விறலியர் ஆடல் பாடல். நாகப்பன் காளனை மயக்கிப் பாட்டில் ஈடுபடுத்துகிறான்.]

**விறலியர் :** [பாடுகின்றனர்]

**இராகம் காம்போதி]** **[ஆதிதாளம்**

**பல்லவி**

ஆடலும் பாடலும் அழகுடன் கூடலும்
ஆனந்தம், ஆனந்தமே ! (ஆட)

**அநுபல்லவி**

தேடக் கிடைக்காத செல்வ மணாளனுடன்
தினமும் மனம்பொருந்தி
திவ்ய ரச கீதத்தால் (ஆட)

**காளன் :** ஹா, ஹா ! இன்பம், இன்பம் !

**நாகப்பன் :** காளா, என் தோழா, எப்படி இந்த இன்பம் !

**காளன் :** இசை யின்பமே யின்பம் ! ஆடலே ஆனந்தம் ! ஆனால், நாழியாயிற்று.

**நாகப்பன் :** அட சை, நீ ரசிகனா? காலத்தை மறந்து கலையை அனுபவிக்கவேண்டுமப்பா ! காளா, இன்னும் கேள், கேள் ! பாட்டு பரவசமாக நடக்கட்டும்.

விறலியர் :

ஆசைக்கிளி கொஞ்ச, ஆர்வக்குயில் மிஞ்ச,
அமுத யாழுடன் குழல் குமுதமிட்டுக் கொஞ்ச,
பாசமெல்லாஞ் சொல்லிப் பரவச முடன் புல்லி,
பதஸா நிதபம கமபத நித வென (ஆட)

காளன் : *ஹா, ஹா, பேரின்பம் பேரின்பம் !*

நாகப்பன் : *காளா, இப்பேரின்பத்தை நீ தினமும் அருந்தலாம் ! நண்பா, சந்தனம் பூசிக்கொண்டு, தாம்பூலந்தரித்துச் செல்லலாம். அடீ காம்போதி, இவருக்குக் கஸ்தூரிச் சந்தனம் பூசடீ ! அடீ பைரவி, தளிர் வெற்றிலை மடித்துக் கொடடீ !*

காளன் : *ஆ, பாட்டின்பத்தில் வீட்டை மறந்தேன் ! நாகப்பா, நன்றி ; செல்கிறேன்.*

## பதின்மூன்றாங் காட்சி

[நாகப்பன் பொறாமைகொண்டு குண்டலகேசியையும் காளனையும் பிரிக்கச் சூழ்ச்சி செய்கிறான்; தன் விறலியின் பாடலைக் கேட்கக் காளனைத் தந்திரமாய் அழைத்து, நேரங்கழித்தனுப்பி, 'இதோ உன் கணவன் கணிகையரிடம்சென்று வருகிறான்' என்று தோழி ஆதிரை, குண்டலகேசியிடம் சொல்லும்படி செய்கிறான்.]

ஆதிரை: *நாகப்பா, மெய்தானா?*

நாகப்பன்: *ஆதிரை, காளன் முழுக்கள்ளன். அங்கே மனைவியிடம் மகா உத்தமன்போல நடந்து கொள்கிறான்; இங்கே வந்ததும் வேசையரின் ஆடல் பாடல் அழகில் சொக்கிப்போய் வீட்டையே மறந்து விடுகிறான். "ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு, நீ இப்படித் திரிவது நன்றாயில்லை" என்றால், அவனுக்கு அசாத்திய முன்கோபம் வருகிறது. 'சினத்தில் இவன் வேட்டைநாய்; தந்திரத்தில் குள்ளநரி. இவனை நம்பவே கூடாது' என்று குண்டலகேசியிடம் சொல்லவேண்டும்.*

ஆதிரை: *நாகப்பா, இவன் இப்படிப்பட்டவன் என்று முன்பே தெரிந்திருந்தால், பெண்ணைக் கொடுத்திருக்கமாட்டார்களே பெற்றோர். உனக்குத்தான் அவளைத் தரத் தந்தை விரும்பினார். அவள் பிடிவாதம் இப்படி ஆனது. தங்கம்போல மனைவியிருக்கத் தரங்கெட்டலையும் கணவனை என்னென்பது?*

நாகப்பன்: *கடைத்தெருவில் இங்கு மங்கும் மோப்பம் பிடிக்கும் நாய்போல், கணிகையர் தெரு*

வில் அவன் அலைகிறான். பழைய திருட்டுத்தோழரும் அவனைக் கெடுக்கிறார்கள். குண்டலகேசி இனி அவனை 'நாதா, பாதா' என்று பாடாமல், ஊடலை அதிகமாக்கி அவனுக்கு உணர்ச்சி வரும்படி இடித்துக்காட்டச் சொல்லு !

ஆதிரை : ஆகட்டும், இன்று குண்டலகேசியிடம் சரியானபடி சொல்லுகிறேன். பெண்களுக்கு நகைக்கவுந் தெரியும், பகைக்கவுந் தெரியும்; இன்புறுத்தவுந் தெரியும், சாகசத்தால் துன்புறுத்தவுந் தெரியும். காளன் வண்டவாளத்தைப் பார்ப்போம் ; அவன் மட்டும் நேரஞ்சென்று வரட்டும்.

நாகப்பன் : இன்று அவன் கணிகையரிடம் சென்று வருவான் ; அவனுடைய மார்ச் சந்தனம், வாசனை, பூ, சிவந்த வாய்—இவற்றைப் பார்த்தாலே தெரியும். அவளிடம் சொல்லி வை !

ஆதிரை : ஆகட்டும். தோழி காத்திருப்பாள் ; செல்கிறேன். [செல்லல்]

நாகப்பன் : பலித்தது சூழ்ச்சி. சேர்ந்தவரைப் பிரிப்பதில் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி ! ஹஹஹ...!

# பதிமூன்காங் காட்சி

[பள்ளியறையில் குண்டலகேசி ஆத்திரத்துடன் உலவிக்கொண்டே பேசுகிருள்.]

குண்டலகேசி : ஆதிரை சொல்வது உண்மைதான்! தினம் நேரங்கழித்து வருகிருர். காரணம் கேட்டால் சரியான பதில் இல்லை. முன்போல் என்னை நேசிப்ப தில்லை. ‘கண்ணே, முத்தே’ என்றதெல்லாம் அந்தக் காலம். பரத்தையர் வலைப்பட்டே இவர் பாழாகிருர். மாந்தர் ஆசையெல்லாம் இப்படித்தான்—விருப் பொரு நாள், வெறுப்புப் பலநாள் ; இனிப்பு கசப்பு, சிரிப்பு எரிப்பு எல்லாம் அலைகளைப்போலப் புரண்டு மோதும் மனிதமனத்தை, எப்படி நம்புவது? இன்று நேசித்தவர் நாளையே பகைத்துக் கொள்கிருர் ! அதிலும் காமத்தீயில் வேகும் மனம் மாறக்கேட்க வேண்டுமா? ஹா, பெண்கள் தலைவிதி இப்படியிருக் கிறது! ஆண்கள் வெளிப்படையாக நெறிதவறலாம். ஆனல் பெண், கண்ணை ஆப்படி இப்படித் திருப்பினு லும் ‘கட்டை விரல் சட்டம்’ வந்து மானத்தைக் கெடுக்கும். வரட்டும் இன்று ; பயமென்ன ? நன்ருகக் கேட்கிறேன்.

[கதவுச் சத்தம் டட் டட் டட்]

யாரது?

காளன் : நான்தானடீ காளன், திற கதவை!

குண்டலகேசி : ஏன், அந்த வீட்டிற்கே திரும்பிச் செல்லலாமே ?

காளன் : கதவைத் திறக்கிருயா, என்ன ?

குண்டல : சரி, திறக்கிறேன். [திறத்தல்]

காளன் : என்ன சொன்னாய் ?

குண்டல : அடிக்கடி இப்படி நேரங்கழித்து வருவதேன் ?

காளன் : என்னைக் கேட்க நீ யார் ? நான் எப்போது வந்தாலும் நீ கதவைத் திறக்கத்தான் வேண்டும்.

குண்டல : இதேமாதிரி, நான் இரவில் வெளியே சென்று வந்தால், உங்களுக்குச் சம்மதமாகுமா ?

காளன் : நான் ஆண்பிள்ளை ; போவேன் வருவேன். நீ பெண்பிள்ளை, வீட்டைக் காத்திருக்க வேண்டும்.

குண்டல : பெண்ணென்ன வீட்டைக் காக்கும் நாயோ ? பெண்ணின் பெருமையே, ஆணின் பெருமை !

(கும்மி மெட்டு)

வீரர் விளைவதும் பெண்ணாலே—கலைச்
  செல்வஞ் செழிப்பதும் பெண்ணாலே !
பாரில் அழகும் சுவையும்—அமுதும்
  பரந்து தழைப்பதும் பெண்ணாலே !

காளன் : என், ஆண்மைக்கு அழகும் கலையும் இல்லையோ ?

பொருள் விளைவதும் ஆணாலே—சுக
  போகம் விளைவதும் ஆணாலே !
அருள் விளைவதும் ஆணாலே—அறி
  வாற்றல் செழிப்பதும் ஆணாலே !

தெரியுமா? உயர்வு தாழ்வு பேசி உரிமை கொண்டாடாதே! ஆண் பெண் இரண்டும் சரிநிகர் சமானம்.

குண்டல: சரி-நிகர்-சமானம், எல்லாம் நாக்கிலே தான்; நடத்தை வழவழா! பெண்களை அடுப்பங் கரைப் பூனைபோலத்தானே நடத்துகிறீர்கள்? ஆண் இப்படிக் கண்ட இடத்திற்கெல்லாம் சென்று நடுநிசியில் வரலாம். பெண் ஒருத்தி அடுத்த தெருவுக்குப் போனால், 'ஐயோ, ஓடுகாலி!' என்று உலகம் தூற்றும்!

காளன்: குண்டலம், நான் பிசகான இடத்திற்குச் சென்றுவருவதாக நீ சந்தேகிக்கிறாய். யாரோ உன் மனத்தைக் கெடுத்திருக்கிறார்கள். அசடே, நல்ல ஆடல் பாடலில் எனக்குப் பிரியம், என் நண்பன் நாகப்பன் இசையரங்கு கூட்டினான்; கேட்டு வந்தேன்.

குண்டல: இதோ என்னைப் பாரும். என் முகத்தைப் பார்க்கவாவது உமக்குத் தகுதியுண்டா? உமது ஜவ்வாது மணமும், மார்ச் சந்தனமும், பூவும், தாம்பூலச் சிவப்பும், அசடுவழியும் முகமும், கள்ளப் பார்வையும்—பார்த்தாலே யோக்கிதை தெரிகிறதே!

காளன்: பெண்ணே, என்ன, வார்த்தை மீறிப் பேசுகிறாய்! நான் யாரென்று நினைத்தாயடி?

குண்டல: தாங்கள் திருடருடன் திருடிச் சிறை சென்ற கள்வர்தாமே! என் தந்தை தங்கள் தலையைக் காத்துச் சிறைவிடுவித்தார். கொஞ்சநாள் மாறியிருந்தீர். மீண்டும் பழைய கள்ளனனீர்: பொய் சொல்லவும், தாசி வேட்டையாடவும் ஆரம்பித்து விட்டீர்.

காளன்: சட், அடக்கு வாயை! நான் எந்த வேசையிடமும் போகவில்லை. பொய் சொல்லாதே! மரியாதையாகப் பேசு!

குண்டல: மரியாதையாக நடந்தால் மரியாதை. வழிதப்பி நடந்தால் முன்போலச் சிறைகாக்க வேண்டியதுதான்; பழைய நண்பர் உம்மைக் கெடுக்கிறார்கள்; மறுபடியும் பழைய கள்ளனாகப் போகிறீரோ?

காளன்: ஹா, என்னையா கள்ளன் என்றாய்! நான் கள்ளனானல் நீ கள்ளிதானே! (மனதுள்) மனமே பொறு! முன்கோபமே இன்று அடங்கு! வார்த்தை வீசாமல், என்னைக் கள்வனென்று அவமதித்த கள்ளியைப் பலி வைத்து விடுகிறேன். பகையே வெளியே நகை!

(வெளியே) என் கண்ணே, குண்டலகேசி உயிரான நீ இருக்கையில், பிறமாதரைத் தீண்டுவேனா? நாகப்பன் இசையரங்கு வைத்து உபசரித்து, இப்படிச் சந்தன தாம்பூலந் தந்தான். எந்தப் பெண்ணிடமும் நான் போகவில்லை; உறுதி. என் ஆருயிர்க் குண்டலம், உன்னையே காதலித்தேன்; என்றும் காதலிப்பேன்.

குண்டல: என்னைக் காதலிக்கக் கொடுத்துவைக்க வேண்டுமே! என் தந்தையார் கோடீசுவரர்; தருமவான்; அரசர் நண்பர். அவரின்றேல் உமக்கு விடுதலையேது?

காளன்: உண்மை, ஒப்புக்கொள்ளுகிறேன். உன் தந்தையே என்னைக் காத்தார். கண்ணே, தெய்வத் துணையும் எனக்கிரங்கி விடுதலை தந்தது. அதற்காக நான் வேண்டிக் கொண்டேன். மலை

முடிச் சாமிக்குப் பொங்கல் வைக்கவேண்டும். நீயும் வரவேண்டும்.

குண்டல: வேண்டுகோள் நிறைவேற்ற வருகிறேன்.

காளன்: கண்ணே, நீ பட்டத்தரசிபோல் அலங்கரித்துக்கொண்டு வரவேண்டும்.

குண்டல: ஆகா, அப்படியே வருவேன். தாங்கள், இனி, வேறெந்த மாதரையுங் கனவிலும் நினைக்கக்கூடாது. உறுதி கூறும்!

காளன்: உறுதியாக, உன்மேல் ஆணையாக, நான் பிறமாதரை என்றும் மனத்தினாலும் தீண்டேன்.

குண்டல: அத்தான் சமர்த்து! இனிப் பழைய கள்ளனாகாமல் பகவான் உம்மைக் காக்கட்டும்!

காளன்: (மனதுள்) இன்னும் கள்ளனென்கிறாயா? வா வா நாளை! (வெளிப்படையாக) கண்ணே, நீதான் கள்ளியாகி எனது நெஞ்சைக் கவர்ந்து கொண்டாயே!

இராகம் கமாஸ்] [திஸ்ரகதி அல்லது ரூபகம்

ஜாலமோக ளாங்கி யேயுன்
சரசமென்ன சொல்லுவேன்!
காலன் வந்த போதிலும், உன்
காதல் வெந்து போகுமோ?

குண்டல:

மோகங் கொண்ட காதலியை
மோசஞ்செய்ய லாகுமோ?
தாகங்கொண்ட நெஞ்சை வஞ்ச
நஞ்சு தீண்ட லாகுமோ?

**காளன் :** குண்டலகேசி, என்னிடம் நஞ்சுமில்லை. உன்னிடம் வஞ்சமுமில்லை. இருவரும் பிணக்கத்தை விடுவோம். போதும் ஊடல். புத்த பகவானை நினைத்துறங்குவோம்; நாளை மலைக்குச் செல்வோம்.

**இருவரும் :**

*இருவிகார மனதை வென்ற*
*இறைவனைப் பணிகுவோம் !*
*நிருவிகார மின்றி நன்று*
*நின்று நிலவ வாழ்க்கையே !*

*ஓம், புத்தா சரணம் !*

# பதினைந்தாங் காட்சி

[நாகப்பனிடம் காளன் விடைபெற்றுக் கொள்கிறன்.]

**நாகப்பன் :** இன்று விறலியர் பாட்டு அமோகமாயிருந்தது!

**காளன் :** உண்மை; ஆனல், என் மனம் இன்று செவிக்கு இணங்கவில்லை. நாகா, உள்ளே ஏதோ சங்கடஞ் செய்கிறது.

**நாக :** காளா, உன் சங்கடமெல்லாம் அவளாலேதான் வருகின்றது. அவளைமட்டும் நம்பாதே! எனது காம்போதியின் அன்பில் பத்திலொரு பங்குகூட உன்னிடம் அவளுக்கில்லை.

**காள :** நாகா, நான் எதையும் நம்ப முடியவில்லை; என்னையே நம்பமுடியவில்லை. எனக்கு முன் கோபம் வந்தால், ஆளே மாறிப்போகிறேன். படித்ததெல்லாம் பறந்துபோகிறது. உலகையே நான் நம்ப முடியவில்லை. நான் ஏன் பிறந்தேன்? இந்த வினையுடலை ஏன் இன்னும் சுமக்கிறேன்?

**நாக :** காளா, நாம் பிறந்தது சுகபோகங்களை அனுபவிக்கத்தான். உடலுள்ள மட்டும் உடலுக்குரிய இன்பங்களை அனுபவிக்க வேண்டும்.

**காள :** எனக்கென்னவோ இச் சுகபோகங்கள் இன்பமளிக்கவில்லை. என் தந்தை மந்திரி. எனக்கு ஏராளமான செல்வமுண்டு. செல்வத்தில் நிறைவான இன்பங் காணவில்லை. உலகமே வஞ்ச மோகக் காடாயிருக்கிறது. சூதும் வாதும் கோளும்

பொறாமையும் சினமும் பகையும் போரும் கொலையு மாகவே உலகம் என்முன் காட்சியளிக்கிறது.

நாக: போடா பைத்தியக்காரா, இதையெல் லாம் நினைத்தால் இன்பங் கெட்டுப்போகும்.

காள: நாகா, பணக்காரர் இன்பத்தைச்சுற்றிப் பல்லாயிரம் ஏழைகளின் துன்பக்கண்ணீர் இரத்த வெள்ளமாக ஓடுகிறதைக் காணாயோ?

நாக: காளா, என்ன வேதாந்தத்தில் இறங்கி விட்டாய்? ஏழைகள் எக்கேடுகெட்டால் நமக் கென்ன? நாம் இரத்தவெள்ளத்திற்கூட நீந்தியே பேரும்புகழும் பெற்று, உலகைச் சுகிக்கவேண்டும்.

காள: இங்கே கண்ட சுகமெல்லாம் பளிச் சென்று மின்னி நம்மை இருட் புயலில் கைவிட்டு மறைகின்றன.

நாக: காளா, உன்னைக் கள்ளனென்றே அவமதிக்கும் அந்தப் பெண்ணாலேதான் இப்படி உனக்கு வேதாந்த வெறிபிடித்துவிட்டது; அவளை நம்பாதே!

காள: நான் யாரையும் நம்புதற்கில்லை; என் மனத்தை ஏதோ ஒரு துக்கம் துளைக்கிறது; நாகா, நண்பரிடம் அன்பைச் சொல்லு! நாளை மலைச்சிகரம் செல்கிறேன்.

நாக: சென்று வா; மறுநாள் பைரவியின் நடனம்!

காள: நல்விடை; [சிந்தனையுடனே நடக்கிறான்] சாவின் பயங்கர நடனந்தான் எங்கும் காண்கிறது. வாழ்க்கையின் முடிவு சாவுதானே? சாவுதான் அறிவின் சாவியாயிருக்கிறது!

[செல்லல்]

## பதினாறாங் காட்சி

[காளனும் குண்டலகேசியும் மலை முடிமேல் புத்தரை வணங்கி நிற்றல். காளன் வஞ்சகமாக வாளையுருவுதல்.]

**காளன்:** கண்ணே, நீ பாண்டிமாதேவிபோல விளங்குகிறாய். உன் அழகே யழகு! கண்ணே, இவ்வளவு அணிமணி அலங்காரங்களையும் சுமப்பது நாற்ற உடல்தானே? இந்தச் செல்வ வாழ்வைக் கானல் நீரென்று புத்தபகவான் உதறிச் சென்றாரே!

### விருத்தம்

[இராகம் பைரவி]

பொன்னெலாம் புவியின் மாசு ;
பொருளெலாம் பொன்றும் மண்ணே ;
பெண்ணெலாம் பிணியின் தூது ;
பிறப்பெலாம் இறப்பின் நேசன் ;
மண்ணெலாம் அகந்தை ; இந்த
மாயையில் மோத லுற்றால்
புண்ணலால் வேறொன் றில்லை ;
போகிறேன் அடவி யென்றான்.

புத்த பகவானே, அப்படி உலக மாயத்தை உதறித் தள்ளியபோது, அதில் அறிவாளி மயங்கலாமா?

**குண்டல:** நாதா, அப்படிப்பட்ட பக்குவம் நமக்கு வரவேண்டுமென்றுதான் இன்று புத்த பகவானுக்குப் பொங்கல் வைத்து வணங்கினோம். பெண்ணிடம் தீதில்லை ; மனமாயைதான் தீது.

காளன் : கண்ணே, என் கண்மணிப் பாவையே, நான் பெண்ணியல்பை நன்ருகப் பார்த்தே சொல்லுகிறேன். கணவனைக் கள்ளன் என்கிற ஒரு பெண்ணை என்னென்பது? கள்ளி என்றுதானே சொல்லவேண்டும்.

குண்டல : கள்ளனைக் கள்ளன் என்று சொல்வதிற் குற்றமென்ன? வெட்கமாயிருந்தால் ஒழுங்காய் நடந்து காட்டலாமே!

காளன் : ஹட், மீண்டுமா? யாரையடீ கள்ளன் என்ருய்? இதோ பார், உன்னை இந்த வாளால் வெட்டிக் கணவாயில் தள்ளிச் செல்கிறேன். பத்தினியாளுல் நில் வாள்முன்! அரக்கி, வஞ்சகி, வாயாடி, நில் வாள்முனையில்; உனது நாக்கொழுப்பால் சா, அழகுச் சிறுக்கீ!

குண்டல : (மனதுள்) இதற்கா இழுத்துவந்தாய்? இரு இரு; கணவாய் ஆழுந்தான். (வெளியே) என் பிராணநாதா, உமது கையால் வெட்டுண்டு சாவது எனது பாக்கியம். ஆனுல், சாகுமுன் ஏழையின் வேண்டுகோள் ஒன்றுண்டு, அதை அளித்தருள்க!

காளன் : சொல் உடனே!

குண்டல : நாதா, நான் பதிவிரதை. தங்களை மூன்றுதடவை சுற்றிவந்து, தங்கள் திருப்பாதத்தில் மலர் தூவி வணங்கிப் பிறகு கழுத்தைத் தருகிறேன்; ஒரே வெட்டாக வெட்டிக் கணவாயில் போட்டு விடுங்கள்!

காளன் : சரி செய்!

குண்டல : [சுற்றிவருதல்] பாதகா, துரோகி, என்னையா கொல்லப் பார்த்தாய்? இதோ விழு கண-

வாயில்! [தள்ளுகிறாள்] நீ இருப்பது பெண்டிர் கற்பிற்கே அபாயம்! ஹ, ஹ, ஹ!

காளன்: ஐயோ, என்வினை என்னையே கொன்றது! புத்தா சரணம்! புனிதா சரணம்!

குண்டல: பழி தீர்த்தேன். வஞ்சகனுக்கு வஞ்சனை செய்தேன். தற்கொல்லியினை முற்கொன்றேன். ஆ, ஆனால் அந்தோ என்ன செய்தேன்! கணவனைக் கொன்ற கள்ளியானேனே! இந்தப் பாவம் என்னை விடுமா? ஐயோ! நானும் தற்கொலை செய்து கொள்ளவா? கணவனைக் கொன்று கழுந்து போல வாழும் கள்ளிக்குக் கதியுண்டோ?

## விருத்தம்

[இராகம் முகாரி]

பாவிநான் பாதகி யிந்தப் பருவுடல்
சுமந்தென் செய்தேன்?
பூவிற்குப் பார மானேன்;
புண்ணியா, புத்த தேவா!
சாவினைத் துணையாய்க் கொண்டுன்
சாந்தவிண் ணகத்திற் கேயான்
ஆவியாய் வருவேன்; என்னை
ஆண்டுகொள் அருளின் வேந்தே!

நாதா, இதோ உம்முடன் வருகிறேன்.

[தாவப் போகிறாள்; வருதல் புத்தநந்தி]

புத்தநந்தி: ஹாஹா, நில் நில்...!

குண்டல: யாரது? ஆ, அடிகளா?

புத்தநந்தி: தாயே, எனிந்தத் தற்கொலைக்குத் துணிந்தாய்? இது கொடிது!

குண்டல: அடிகாள், கொலையா, தற்கொலையா? எது கொடிது?

புத்தநந்தி: இரண்டும் கொடியன. தாயே, உனது துயரென்ன? உன் கண்ணருவியின் கதையென்ன?

குண்டல: ஐய, என் கணவர் இக்கணவாயில் விழுந்து இறந்தார். நானும் அவருடன் போகிறேன்.

புத்தநந்தி: அம்மா நில், வா என்னுடன்; புத்த மந்திரத்தில் இரு! தற்கொலை தீது.

குண்டல: அடிகாள், நான் செய்த பாவத்தை எப்படித் தொலைப்பேன்?

புத்தநந்தி: தாயே, பாவந் தொலைய வழிகாட்டுகிறேன், வா புத்தாலயத்திற்கு!

குண்டல: புத்தா, நீயே குருவாக வந்து வழி காட்டினய்!

[செல்லல்]

# பதினேழாங் காட்சி

[பொன்னியும், வணிகமணியும் மகளைத்தேடி மலைச்சிகரத்திற்கு வருகின்றனர்.]

பொன்னி : ஐயோ, என் மகளைக் காணேனே! காளன் மலைச்சாமிக்குப் பொங்கலிடுவதாக அழைத்துச் சென்ருன். அவனையும் காணோம்! இவளையும் காணேமே! என் அருமை மகளே, நீ எங்கே சென்ருய்?

வணிக : இந்தக் கணவாயில் யாரோ விழுந்ததாக மலைக்குறவர்கள் சொன்னார்களே. இருவருந்தான் கால்தவறி விழுந்தார்களோ? ஐயோ விதியே...! ஹா, இந்த இருட்கணவாய் நமது மனம்போல் இருளாயிருக்கிறது; ஏ பயங்கர மோனமே, எங்கள் செல்வரை நீயா விழுங்கினய்?

[வருதல் மந்திரி]

மந்திரி : காளா, காளா, உன் விதி இப்படியா முடியவேண்டும்! ஐயோ மகனே!

வணிக : வாருங்கள், செய்தி கிடைத்ததா?

மந்திரி : ஹா, கேட்ட செய்தியை எப்படிச் சொல்லுவேன்? நண்பா, வணிக மணியே, காளன் இக்கணவாய்க்கே இரையாஞன்...........குண்டலகேசியும் இங்கேதான் கணவனுடன் விழுந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆனாலும், நாற்புறமும் வீரர் சென்று விசாரிக்கின்றனர்.

வணிக : வித்தகரே, விசாரித்தென்ன இனி? வாழ்வின் நாடகம் அவ்வளவுதான்! நமது புத்த

பிரான் உலகின் நிலையாமையைக்கண்டு வருந்தியபடி நாமும் வருந்தித் துறப்போம். இருப்பதெல்லாம் இறப்பதே...!

வாடிய மலரைத் தூய
 வாரியிற் புயலே, நாளும்
வீடிய இலையைக் கண்டே
 விழியினின் றருவி பாய்ச்சி,
சேடியர் மனைவி மக்கள்
 திருவுடன் மின்னும் இன்பம்
நாடக வுலகச் சீர்; போம்
 நமன்விடுந் திரைக்குள் என்றான்!

அவ்வளவுதானே செய்தி? நாமும் ஓர் நாள் அதே திரைக்குள் மறையவேண்டியதுதான்.

பொன்னி: நாம் இதுகாறும் மகளுக்காகவே உலகில் பாசம் வைத்திருந்தோம். இனி, யாருக்காக வாழவேண்டும்? இருவரும் புத்தாலயத்திற் சேர்ந்து இறுதி நாட்களில் புண்ணியந் தேடுவோம்.

மந்திரி: மூவராகச் செல்வோம். எனக்கும் உலகம் புளித்தது. புத்த பகவானுக்கு ஞானக்கிழவன் சொன்ன அறிவுரைகள் எனது செவியில் ஒலிக்கின்றன. நானும் எனது பட்டம்பதவி, சொத்து சுகமெல்லாம் துறந்து, புத்தரைச் சரண்புகுவேன். செல்வோம் மூவரும்!

[வருதல் நாகப்பன்]

நாகப்பன்: ஏன், நால்வராகச் செல்வோம். பெரியீர், செய்திகேட்டேன். என் நண்பன் காளன் இன்று இறப்பென்னும் கணவாயில் வீழ்ந்தான்; நாளை நாமும் அப்படியே!

**மந்திரி:** *நாகப்பா, உனக்கெப்படி இந்த வைராக்கியம் வந்தது?*

**நாக:** *ஐய, நான் செல்வச்செருக்கின் உச்சத்தில், ஆடல் பாடல்களை அனுபவித்தேன்; ஏழைகளைக் கொள்ளையடித்துப் பணஞ்சேர்த்துப் பரத்தையருக்கீந்தேன்; நான் பிரியம்வைத்த பெண்டிர், என்னையே புறம்பேசி யிகழ்வதைக் கேட்டேன். நேற்று என்னுடன் குலாவிய காளன், இன்று சாவுக் கணவாயின் பயங்கர இருளில் மின்னென மறைந்ததைக் கண்டேன்! இச்சோக நாடகத்தின் சூத்திரதாரி இந்தப் பாவியே! நானே ஒன்றியகாதலரைப் பிரிக்கச் சூழ்ச்சி செய்தேன். என் வினை என்னையே சுடுகிறது; பெரியீர், இனிப் பேச்சென்ன? புத்த பகவான் போகசுகத்தின் உச்சியிலிருந்து சொன்னதை நாமும் சொல்லிச் செல்வோம்:*

### விருத்தம்

**[இராகம்: கானடா]**

*துயிற்சுவை யென்னே மாதர்*
*தோட்சுவை யென்னே சுற்றும்*
*செயற்சுவை யென்னே உண்ணத்*
*தீஞ்சுவை அமுத மென்னே!*
*மயற்சுவை அனைத்தும் சாவின்*
*வாய்ச்சுவை என்ன நீத்தான்!*
*இயற்சுவை உள்ளே கண்டார்*
*இகச்சுவைக் கலைவ தாமோ?*

*செல்வோம் நால்வரும்!*

**ஆதிரை:** *உண்மை, உண்மை. ஐவராகச் செல்வோம்; ஆருயிர்த்தோழி சென்றபிறகு வாழ்வே*

புளித்தது ; இனிப் புத்தனே இன்பம் ; புத்த சேவையே வாழ்க்கை !

எல்லாரும் : புத்தா போற்றி, அறமே போற்றி, அறவீர் போற்றி !

[செல்லல்.]

# பதினெட்டாங் காட்சி

[குண்டலகேசி புத்தபாதம் பற்றித் தன் பிழைகளை வருந்தல்; புத்தநந்தி ஆறுதலளித்தல்.]

குண்டல: புத்த தேவா, உன் மலரடியில் துயர்க் கண்ணீர் வார்க்கிறேன். நீயே புகல். உலகெங்கும் இருள், துயர், இடர், வஞ்சம், கொலை, பயங்கர நரகம்! உனது திருவடியைச் சுற்றித்தான் அமைதியொளி காண்கிறேன். என் அப்பனே, நீ எனக்கிரங்குவாயா? அக்கொடிய செயலைச் செய்த பாதகிக்கும் இரங்குவாயா? கருணைக் கடலே, பெண்ணாய்ப்பிறந்து, செல்வமனையில் வளர்ந்து, நான் பெற்றதென்ன? ஒருவனைக் காதலித்துச் சிற்றின்பத்தால் நான் பெற்றதென்ன? ஒன்றுமில்லை. இனம் வெறுத்து, மனம் வெறுத்துச் சாவின் ஆழ்க்கணவாயில் குதிக்கும்போது, உனது கருணை மின்னொளி போல என்னுட்புகுந்தது! புத்தா, ஞானச்சித்தா, என்னைத் தடுத்தாட்கொண்ட உனக்கு வணக்கம், வணக்கம்! பெற்றோர் மற்றோர் உறவெல்லாம் புளித்தன; உன் திருவடியார் உறவே உறவு! இறைவா, என்றும் உன்னடியார் கூட்டத்திலிருந்து உன்பணி புரியும் இன்பமருள்! ஆ, ஆனால், இந்த இன்பச்சூற்றத்திலும் அதை நினைத்தால், துன்பக்கணவாய் என்னை விழுங்கவருகிறதே!

நாதா, என்னை மன்னிப்பீரா? ஆ, அந்த இருட்கணவாயில் எவ்வாறு தவித்தீரோ? கொலை பாதகம் என்னை விடுமா?

[காளன் ஆவி பளிச்செனத் தோன்றல்.]

ஆ, இதோ என் கணவர் உரு ! வந்தீரா ?

காளன் உரு : குண்டலகேசி, நானே கொலைஞன். முன்கோபத்தால் உன்னையும் கொன்று, நானும் கணவாயில் விழுந் துணிந்தேன் ; என் வினை என்னை மாய்த்தது ; நான் புத்த பெருமானையே சிந்தித்ததால், இதோ நல்ல பதவி சேர்ந்துளேன். குண்டலகேசி, நீ வினையுலகைத் துறந்து, பகவான் பணிநலம் புரி ; சென்றதை மற ! உலகில் பாபமூட்டை சுமந்து எத்தனை நாள் இருப்பது ? நீ அறவோர் திருக் கூட்டத்துடன் தரும சேவை செய்து, புண்ணியஞ் சுமந்து விண்ணகம் வா ! அங்கே இருவரும் சந்திப் போம். ஓம், நமோ புத்தாய !

[மறைதல்]

குண்டல : ஆறுதலுற்றேன் ! சென்றதை மறப் போம் ; இறைவனையே நினைப்போம்.

ஆஆ துன்பம்...அந்தோ பிறவி !
இன் றுளார் நாளை யில்லை யாவார்.
குழந்தை யிறந்து குமரி யாகிக்
குமரி யிறந்து குலமக ளாகிக்
குலமகள் தாயாய்க் குலச்சுமை தாங்கித்
தாயும் பாட்டியாய்த் தளர்ந்து தளர்ந்து
புதைகுழிக் கிரையாய்ப் போய்மண் ணுவதே,
உடலின் கதையாம் ; உயிரின் கதையோ,
மனமயக் காட்டம் ! மற்றொரு பிறவி
வேண்டேன் வேண்டேன், விநாயக மூர்த்தியே !
மாரனை வென்ற வீர தீரனே,
போதி சத்துவ ஜோதியே, சரணம் !

[வருதல் புத்தநந்தி]

புத்தநந்தி : அம்மா குண்டலகேசி, புத்த பாதம் உனக்கு அமைதி யளித்ததா ?

குண்டல : புத்தபாதம் எப்போதும் அமைதியே அளிக்கும்! மாங்கனி எப்போதும் இனிக்கும்; ஆனால், பித்தம்பிடித்தவனுக்கு இனிக்காது. அடிகாள், தங்கள் அருளால் எனது நெஞ்சையழுத்திய கவலைச்சுமை பெரிதும் குறைந்தது. எனது வாழ்விற்கு புத்தசேவை கிடைத்ததே பெருமகிழ்வு! ஆனாலும், துயர்மேகம் இன்னும் கண்ணீர் பொழிந்து கொண்டுதான் இருக்கிறது; வினை கரையவில்லை.

புத்தநந்தி : குண்டலகேசி, ஆகாயத்தில் கார் மேகங்கள் படர்ந்து, அடைமழை கொட்டுகிறது. அப்போது வெய்யிலுக்காக உலகம் தவிக்கிறது. மேகங்களெல்லாம் பொழிந்து, மறைந்தபிறகு, வானம் தெளிகிறது; சூரியன் உதிக்கிறது. ஆ, அந்த உதயத்தின் தெள்ளிய ஒள்ளிய அழகை நீ பார்த்திருப்பாய். அன்று அடிக்கும் வெய்யிலின் அழகே அழகு! உலகெல்லாம் அன்று பொன்னும் பச்சையும் குலுங்கும். அதேமாதிரி, மனக்கவலைகள் புத்தர் திருவடிப்பற்றால், கண்ணீராகக் கரைந்துருகி வெளியேறியபிறகு, ஜீவனில் தெளிவும் அமைதியும் புகுந்தொளிரும்.

குண்டல : குருநாதா, இப்பிறவியில் அந்த அமைதி இப்பாவிக்கு வருமா? எனது வினைச்சுமை மலையினும் பெரிது; எனது பாவம் என் கழுத்தைப் பிடித்துத் துன்பத்தில் தள்ளுகிறதே!

புத்தநந்தி : அம்மா, குண்டலகேசி, உலகமே ஒரு நாடகசாலை; அதில் இருவிகார நாடகம் நடக்கிறது. அந்த நாடகத்தில் இன்பக்கண்ணீரை விடத் துன்பக்கண்ணீரே ஆறாகப்பெருகும். முடிவில் நாடகப் பாத்திரர் அனைவரும் அக்கண்ணீர் வெள்ளத்திலேயே கரைந்து மறைகின்றனர். அம்மா, மண், செடி,

மரம், புழு, பூச்சி, விலங்கு முதலிய எத்தனையோ பிறவியெடுத்து, மானிடம் வருகிறது. மானிடத்தி லும் படிப்படியாக எத்தனையோ வேறுபாடுகள் உண்டு. பலபிறவிகள் எடுத்தபிறகே மனிதன் ஞானம் பெறுகிறான். அத்தகைய ஞானத்தைப் புத்த பக வான் போதியடியில் பெற்று, உலகிற்கு உபதேசித் தார். குண்டலகேசி, ஜீவர்கள் தீயில் விழுந்த புழுப் போல் துன்பத்தில் வீழ்ந்து மடிகிறார்கள்.

குண்டல : குருதேவா, துன்பத்தின் காரண மென்ன ?

புத்தநந்தி : தாயே, புத்தபெருமான் போதியடி யில் ஞானம் பெற்றபிறகு, ஐந்து சீடர்களுக்கு இவ் வாறு உபதேசித்தார் : "துறவிகாள், பற்றினாலே தான் துன்பம் வருவது ; பற்றற்றால் இன்பமே. ஆசை தான் பற்றுவது ; ஆசைக்கட்டை அறுத்தால், துய ரில்லை. துக்க நிவாரணத்திற்கு முதற்படி பஞ்ச சீலம் : உயிர்க்கொலை தவிர்த்தல், பிறர் பொருளைத் திருடாமை, பொய்சொல்லாமை, கள்ளுண்ணாமை, வியபசாரியாகாமை—இவையே பஞ்சசீலம். தூய உணவு, தூய நினைவு, தூய நடை இம்மூன்றும் வாழ் வைத் தூய்மையாக்கும்.

குண்டல : குருவே, தூய வாழ்க்கையை இந்த அன்பர் கூட்டத்திலேயே கண்டேன். புறவுலகில் நான் பெற்ற சீரும் செல்வமும் என்னையே அசுத்த மாக்கின. ஆசைவாழ்வு, பாசவாழ்வு ; மோசவாழ்வு; அதை ஒழித்தேன். தங்கள் அருளால் துன்பவீட்டை நீத்தேன் ; இனி இன்பவீட்டை யடையவேண்டும் ; அதற்கு வழி யருளுக !

புத்தநந்தி : தாயே, பகவான் புத்தர் இன்ப வழியை இவ்வாறு அருளுகிறார் :

விருத்தம்

*[இராகம் தோடி]*

*பொல்வினை நீத்துப் பாசப்*
*போர்வினை நீத்துத் தீய*
*கொல்வினை நீத்து, நல்ல*
*குணங்களைப் பயின்று, சென்ம*
*வல்வினை நீத்து, தூய*
*மாதவம் புரிந்து நாளும்,*
*எல்லையில் முத்தி யின்பம்*
*எய்துக வுலக மெல்லாம்!*

*[வருதல் பொன்னி, வணிகமணி, ஆதிரை, மந்திரி, நாகப்பன்]*

எல்லாரும்: *புத்தரே சரணம்! அடிகாள், ஆ அந்த முத்தியின்பத்திற்கே தாகங்கொண்டு வந்தோம்?*

ஆதிரை: *ஆ, இதோ நமது குண்டலகேசி!*

பொன்னி: *மகளே, இங்கா புகுந்தாய்? ஆ, நீ மறைந்தாய், இறந்தாய் என்று விசனித்தோம்; பகவான் காத்தார்!*

வணிக: *மகளே, சென்றதை மற! நாங்களும் மறந்தோம். இனி இங்கேதான் இருக்கை.*

குண்டல: *பெரியீர், முன்னுறவுகளெல்லாம், துன்பவுறவுகள்; பாச வுறவுகள்! இங்கே, புனிதமான அறவோர் உறவும் அகளங்கர் அருளும் கொண்டு உய்ந்தேன்!*

எல்லாரும்: *நாங்களும் உய்வுபெறவே வந்தோம் அம்மா; குருதேவா, எங்களை ஏற்றருள வேண்டும். எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம் இனிப் புத்த சேவைக்கே!*

புத்தநந்தி: *அன்பர்காள், இருங்கள்; அமைதி*

பெறுங்கள்! குண்டலகேசி, இனி இந்த நாடகம் முடிந்தது. எல்லாரும் புத்தபிரானைப் பாடி வணங்குவோம்:

இராகம் நாதநாமக்ரியை ] [சதுச்ர ஜாதி ரூபக தாளம்.

அத்தா என்னை ஆண்டாய் இனி
வேண்டேன் அரும் பிறவி
பித்தாகிய சக மாயையைப்
பின்விட்டுனைப் பணிந்தேன்.
சித்தா, ஜீவன் முக்தா, ஜின
நாதா, குரு தேவா,
புத்தா, போதி சத்வா, பரி
சுத்தா சரண் இறைவா!

குண்டலகேசி நாடகம் முற்றிற்று.

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

### இயற்றியவை

| | ரூ |
|---|---|
| புதுக்கவி விட்மன் | 1 |
| மகாகவி ராஸீன் | 1 |
| மகாகவி தாந்தே | 1 |
| வரகவி தாம்ஸன் | 0 |
| ஞானி எமர்ஸன் | 0 |
| அன்பின் அற்புதம் (வாகீசரைப் பற்றிய அரிய நாடகம்) | |
| ஸ்ரீ ராம தூதன் (கம்பன் கலை நாடகம்) | |
| முல்லை மணம் (ஓரங்க இசை நாடகம்) | |
| காலத் தேர் (காவிய நாடகம்) | |
| முன்னேற்றப் பாடல்கள் | |
| அருட்சுடர் வள்ளலார் | |
| அரவிந்த யோக தீபிகை | |
| கல்விக் கதிர் (புதிய கல்வி முறை)-காலிகோ | |
| சமய சாரம் | |
| நாடகக் கலை (ஆராய்ச்சி) | |
| அன்புறுதி | |
| அன்பு வழி | |
| ஓவியக் கவி வில்லியம் ப்ளேக் (அச்சில்) | |
| சிலம்புச் செல்வம் (2-ஆம் பதிப்பு) ( ,, ) | |
| கலிமாவின் காதல் முதலிய கதைகள் ( ,, ) | |


**ANBU NILAYAM**

PUBLISHERS & BOOKSELLERS

RAMACHANDRAPURAM (POS

TRICHY DIST., S. I

ஓம்
சுத்த சக்தி

அன்பு நிலயம்

Commercial Printing & Publishing House, G. T., Madras